# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2075/31 - 2018 ජූනි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.06.14

2075/31 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள்

அறவீட்டுச் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக் கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2018, யூன் மாதம் 14 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகின்ற ஒரு வருட காலப் பகுதியொன்றுக்கு 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் 2018.03.19 ஆந் திகதிய 2063/13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இ.மு.கு. 0713.31.29 இன் கீழ் வரும் உழுந்து சம்பந்தமான உத்தரவு 2018, யூன் மாதம் 14 ஆம் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2018, யூன் 13.

1A - PG 4081 - 532 (2018/06)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 01. | 03.03 | | தலைப்பு 03.04 இன் கீழ்வரும் முள்ளற்ற மீன் துண்டுகளும் பிற மீன் இறைச்சியும் நீங்கலாக ஏனைய மீன் - குளிரால் உறையச் செய்யப்பட்டது | |
| | | 0303.89.90 | பிற - தலபத்து மீன் (Istiophorus platypterus), மார்லின் மீன் (Makaira spp) மற்றும் தோர மீன் (Narrow - barred Spanish mackerel / Scomberomorus commerson) மட்டும் | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00 |
| 02. | 08.01 | | புதிய அல்லது உலர்த்திய கோது நீக்கிய அல்லது நீக்கா தோல் நீக்கப்பட்ட அல்லது நீக்கப்படாத தேங்காய்கள், பிறேசில் விதைகள் மற்றும் மரமுந்திரி விதைகள் | |
| | | 0801.19.90 | பிற - தேங்காய் பருப்பு | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 1.00 |
| 03. | 07.13 | 0713.31.29 | பிற - உழுந்து | கி.கிராம் ஒன்றுக்கு ரூபா 150.00 |

06-1088